ஞ்-சித்தமறிவல்வினைக்குவயிரவன் மூவிலைநுதியிற்சேர்வாரன்றே.

சீதமலர்ச்சிவகங்கைசிவனுருவேயென்னாதோர்தெண்ணீரொன்று
ம்-பாதகர்நான்முகன்வாழ்நாளளவுநிரையக்குழியிற்படிவர் நிந்தை-
யோதினர்கள்சிவநிந்தையுரைத்தவரோபூசனைகளுவந்துசெய்த-லாதி
னைப்பூசித்தலாமுண்மையறைந்தனம்யாமறிவான்மிக்கோய். (௪௯)

உடலிடைவெம்பிணியகலக்கல்வியொடுசெல்வமெலாமுறச்சிறந்த,
மடமகளிர்புணர்ச்சிபெறப்பாவருந்தன்வயத்தாகமனங்கொண்டந்தத்-
தடமதனின்மூழ்கினாலவையெய்துங்காவடியிற்றூங்கியன்பா-னடை
மருவினோரடிக்கோர்பரிமேதமகப்பயனைநண்ணிவாழ்வார்.. (௫௰)

படிபுகழ்ச்சிவகங்கைப்பானியந்தனைப்பானம்பண்ணிச்செல்வோ
ரிடிமுரசக்கொடியபடைச்சமர்க்களத்திலேறினாலிவரோவெல்வர்கொ
டியவிலங்கிராக்கதர்பேய்பாரிடங்கடூங்கிழையாகுறிக்கிலாயு-முடிவி
னயற்பதிகொணர்ந்தநீர்பருகின்மகேசர்பதமுத்திசேர்வார். (௫௧)

அன்னதலத்தாதலயற்பதியாதலிருந்தரனையந்நீர்தன்னான் - மன்
னியபூசனையோருக்கீசர்பதமத்தோயமஞ்சனத்தாற் - றன்னிகராஞ்
சிவார்ச்சனையைநாடோறும்புரிவோற்றுங்கள்செய்த- வின்னலுறும
பாதமென்பனவெல்லாம்பொறுப்பனிமையோர்நாதன் ...(௫௨)

தென்புலத்தார் தமைநோக்கி யந்நீராற் றருப்பணங்கள் செய்தா
னாகிற்-றன்பெரியமூவகையிற்சுற்றமெலாநற்கதியிற்சார்ந்துவாழ்வ
ரின்பமுறப்பொருள்வேண்டியாடினாலங்கவைகளெய்துமென்றுமம்
புவிமீதிச்சையறமூழ்கினான்மகேசர்பதம்வாய்க்குமன்றே ...(௫௩)

எங்குமிடையறநிறைந்தபரம்பரனோர்தீர்த்தவடிவெய்திநின்ற-பொ
ங்குபுனற்சிவகங்கையதன்பெருமையாவரோபுகலற்பாலார் - திங்கள்
வளர்பக்கத்திற்சதுர்த்தசியிற்சனிவாரஞ்சேரின்மூழ்கிற் - றங்கள்ம
னநினைத்தவெல்லாங்கூடியரும்பெருவினையுந்தணந்துநீங்கும்(௫௪)

திங்கள்குருமங்கலவாரங்களிவைகலைமதியந்தேயும்பக்கத்-தங்கண்
முடிவுறும்பருவங்கூடியநாளிந்திரவியரவநுங்கிப்-பொங்குதனமிக்
கதிலச்சித்திரத்துப்புண்டரிகப்பொய்கைபாடிற்-றங்குகொடும்பெ
ருவினைகளுள்ளவெலாமொழிந்துதவத்தலைவராவர்... ... ... (௫௫)

வந்துப்படிந்தோர் விடுத்தவினைகளறக்கங்கைமுதன்மாநீர்த்தங்கு-
டர்தமதுசுருதிகளாற்சிவகங்கைதினம்படிந்துசார்த்துநின்ற - வந்
தமிலாதன்றுதவுமாசிமகத்தத்தீர்த்தமனைத்தும்வந்து-முந்துநெறி
தமக்குரியசத்திமுழுதுடன்முழ்கிமுதன்மையெய்தும்.... (௫௬)

இவ்வண்ணமுறுமாசிமகத்தரியசிவகங்கையெய்திமுழ்கின்- மைவ
ண்ணவினைநீங்கிச் சிவத்தடைவர்மன்றுடையான்மகிழ்சேவைக்குட்-
பொய்வண்ணமொழித்ததிருவத்தயாமம் போலப்புகல்காலத்துண்-
மெய்வண்ணமுறுமாசிமகத்தந்தநீராடன்மிக்கதம்மா........(௫௭)

யாரேனுந்தங்கண்மனமறியாமற்செய்தவினையெல்லாமல்லற்-பா
ரோமெண்புண்டரிகச்சிவகங்கையாடினுற்பற்றற்றேகுஞ் - சீரோதுச
யிமினிவவுளாத்தவைக்கோளாயமிலைதெரிதியென்றான் - காரோதுக
ண்டத்தான்பெருமையெலாம்புராணத்தாற்காட்டுமேலோன். (௫௮)

நியமச்சருக்கமுற்றும்.

{ பாயிரம்உட்படச்சருக்கம்-௫-க்கு.
திருவிருத்தம்-௬௱௰௪. }

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

# சோமனாதச்சருக்கம்.

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.]

சயமிருந்தமெய்த்தவருறைதில்லையந்தலத்திடை யுறைவோர்தந்-
நியமமுள்ளனகூறினமாறிலாநெடுவரைச்சிலைதாங்கும் -புயமுயங்கி
யபுராரியெம் பராபரன்பொருள்கவர்ந்தெடுத்தோர்தம்-பயமிருந்த
வெங்கொடுவினைப்பெருமையின்பரிசினைப்பகர்கின்றாம்........(௧)

சஞ்சிதத்துடன்வருவினைகடிந்திடுஞ் சயிமினிகரங்கூப்பி - யஞ்ச
லித்துளங்குழைவுறப்புளகமோடமர்ந்துதேசிகனுண்மை - நெஞ்ச

மூற்றிடவிருந்தாழியருந்தவநிருபனுடலிவன்றன்மேல் - விஞ்சுமற்புத
நெஞ்சம்வைத்தின்னமுமெய்ந்நெறிவிரிக்கின்றான்...... ......(௨)

அத்தலத்தறியாதுசெய்வினையதுமந்நெறியுணர்த்தோமுன் - வை
த்தவற்றினுநீக்கரிதாகியவல்வினையாதென்னி - னித்தவானவர் வேதி
யர்பொருள்கடந்நெஞ்சறியார்கொண்டு - துயத்தகள்வர்வல் வினைய
துசாந்தியாற்றொலைக்கரிதாமன்றே. ... ... ...... ......(௩)

கோதில்வேதியர்பொருளறியாமையாற்கரவினிற்கொணர்ந்தோர்
கள் - போதநொந்ததிற்பதின்மடங்கதனொடுபொருள்கொடுத்தறிவி
ல்லேன்-றீதுநீர்பொறுமெனவணங்கலுமவர்சிந்தையிற்களிகூர்ந்திப்
பாதகம்பொறுத்தோமெனிலவ்வினைபடர்ந்திடாதிடைந்தோடும்.(௪

அல்லதவ்வினையாற்றவோராயிலையறிவிலாரமிர்தந்த-மல்லல்வேதி
யர்பொருள்கவர்ந்தாரொனில்வருமருவினையீட்ட-மொல்லையந்தணர்ம
கிழ்தரக்கடவுளருவப்புறப்பலபூசைத் - தொல்லையாகமமுதலியபுரி
யினுந்தொலையுமோதொலையாவாம் ... ..... ... ... ...(௫)

பொறையுஞானமும்புலப்பகைசாடலும்புனிதன்மேலன்புங்கொ
ண்-டறைபுமேன்மையராயினுங்கரவினிலணுவளவறியாமற்-குறைவி
லாவிடைக்கடவுடன் பொருடனைக்கொண்டவல்வினை தீர்க்கு- முறை
மையென்றுமுண்டாகுமோநரகிடைமூழ்குதன்முறையாமால்.(௬)

அளவிலாச்சிவபரம்பரன்பொருளினிலணுவளவறியாமற்-களவுசெ
ய்தவர்மட்டலவன்னதுகாண்பவர்தாமும்போ - யுளநடுக்குறுநரகி
டைமூழ்குதலுண்மையேயிதுதன்னில்- வளமிகுந்ததோரருங்கதை
கேளெனவகுத்துரைசெய்கின்றான் ... ... ... ... ... ...(௭)

சீதநுண்டுளித்தரங்கமேலைத்திசைச்செழுங்கடற்றீரத்து-மாதவ
ம்பெரியோரிமையோர்கிளைவழுத்தரும்பரஞானச் - சோதிநாயகனி
டைவிடாதுறைதருஞ்சோமநாதப்பேராற்- பூதலந்தனிற்சிவபதியுள
தெனும்பொற்பதியுளதம்மா... ... .. ..................(௮)

அந்திவான்மதிமிலைச்சியபரம்பரனணிவிழாவொலிவாச-மந்தமா
ருதம்வந்தசைபந்தரின்மாளிகைமணத்தோதை - சந்தனுசலமுலைப
வர்நடமிடுஞ்சரணநூபுரவோசை - சிந்துவார்திரைவாரிதியரவமுஞ்
சிறிதெனச்சேணேங்கும் ... ... ... ... ... ... ...(௯)

மறைகளுள்ளனவாதலாலயன்பதமாகமம்வளர்நீதித்-துறைகளின்
புறவிளங்கலாற்றுளக்கிலாச்சிவபதமெனத்தோற்று - தறைமலர்த்தி

ருவாழ்தலானாரணனற்பதப்போலாகு - நிறையவானவர் செறிதலாற்
றுறக்கமூறிகர்க்குமப்புரமன்றே... ... ... ... ... .........(௰)

அறந்தயங்கலினிலைபெறுமலைமகளனையதுபுனைசெல்வத் - திறந்
தயங்கலிற்றிருமகள்புரைவதுதிகழ்தருகலைநன்னூ-னிறந்தயங்கலின
ளவறுகலைமகணிகர்ப்பதுபொறையுந்தன் - புறந்தயங்கலிற் புவிமக
ளன்னதப்புரத்தையார்புகழ்கிற்பார் ... ......... ... .....(௰௧)

பல்வளங்களும் படைத்தலான் மடற்றிகழ்பங்கயாசனன் போலு
ஞ்-செல்வமல்குவித்துயிர்பலவளர்க்கலாற்றிருநெடுமாலேற்கும்- வ
ல்வினைத்தொலைமாய்த்தருள்வழங்கலான்மழுவலான் றனையொக்கு-
மெல்வளர்ந்தெழுமாடமாளிகைகளாலிலகியபுரமம்மா... .....(௰௨)

பிருகுமாமுனிசபித்தலினடைந்தவெம்பிறப்புக ளோர்பத்தின்-
றிருவிளங்கியவிதுகுலத்திடைவசுதேவன்பாலுதயஞ்செய் - தருளு
மாயவன்புதல்வரோடத்தலத்தடைந்துடறவிர்ந்தின்ப - மருவுதன்
பெரும்பதம்புகுந்தானெனில்வழுத்தலாம்படித்தன்றால்......(௰௩)

அளந்துகாணவுநாவினாற்பகரவுமரிதான- வளம்பெரு
ஞ்சவுராட்டதேயத்திடைமறைநெறிச்சிவநீதி - துளங்கலொன்றிலா
ப்பொற்பிரகாசமாஞ்சோமநாதந்தன்னில்-விளங்குகார்த்திகைத்திங்
களிற்கார்த்திகைவிழாநடத்துவன்றே... ........ ... ...... (௰௪)

நவ்விதங்கியசெங்கையோனருச்சனைநயந்துமுப்போதுஞ்செய்-
செவ்வியோன்சிவசன்மனென்பவன்சிவசிந்தையந்தணர்கோமா,னெ
வ்விழாவினுநல்விழாவிதுவெனவேத்துகார்த்திகைத்திங்க- ளவ்விழா
வணியிறைஞ்சுவான்பராபரனன்பரோடணைவுற்றான்... ... ...(௰௫)

குடதிசைக்கடற்படிந்தருட்டானங்கள்கொடுத்துமையொருபாக
க்-கடவுடன்பதஞ்சோமனாதத்திடைக்கருத்துறப்பணிந்தேத்தி-விட
லரும்பரி வுடன்மகிழ்ந்துறைபவன் விளங்குகார்த்திகை நன்னாட்-
டொடருமந்தியிற்றீபகாலத்தணிதுற்றவாலயஞ்சேர்ந்தான். (௰௬)

சென்றசந்நிதிசிறிதணித்தாகமுன் சேர்ந்தவன்பர்கள்கூட-நின்றி
றைஞ்சுமவ்வெல்லையிலிங்கிவனிகர்ப்பதோர்சிவற்கன்பன்-தன்றனை
த்தலைச்சோமசன்மப்பெயர்தரித்தருணெறியென்றுந்-துன்றுவேதி
யனொருவனவ்வெல்லையிற்றொழுதருகுறநின்றான்......... ......(௰௭)

வருநெருக்கினச்சோமசன்மன்றிகழ்வடிவுபட்டெரிகின்ற-திருவி
ளக்குநெய்யகலொடுவீழ்ந்ததுதெரிந்துகண்டிலனன்றோ. னருகுவ

ண்டுநிற்குஞ்சிவசன்மனென்றறைந்திலன்றிருநாளு- மொருவவிங்கி
வர்தந்தமக்குரியவாவுறைவிடந்தனையுற்றார்.......... ...(௰௮)

சிறிதுநாட்கழித்துடன்சிவசன்மனுந்திருவிளக்கதனைப்பார் - ம
றியவிழ்த்தியசோமசன்மனும்பொறைமாய்ந்தனர் மாய்ந்தந்தோ-
செறியின்வானவராயினுந்தீய்த்தெழுந்தீச்சுரமென்றியாரு - மறிவு
லைந்தவிந்தாடவியிடத்தடைந்தலகையாயினரன்றே......... (௰௯)

திருவிளக்குநெய்யகலொடுவீழ்த்தியசோமசன்மனுஞ் சேர்ந்த-
வுருவினென்பதுவாயிலிற்சீவிழவுடன்புழுக்குடைந்துந்த - மருவு
நாற்றமூன்றியோசனைநாற்றிசைவளர்த்திடவுடல்வாடப் - பெருகு
நீரருந்தாகமும்பசியுமேற்பிறங்கவங்குலைகின்றான்........... (௨௰)

கண்டுநின்றவச்சிவசருமனுமிகக்கருதருகுறளாகிக்- கொண்டவெ
ம்பசிமேல்கொளநாக்குமுக்கூப்பிடுவளர்ந்தந்தோ-மண்டுகண்கரு
மலையெனத்தளர்ந்தனவளருநாவிழியூனைத்- துண்டவெம்பறவைக்கு
லமெறும்புணத்துயரடைந்தலமந்தான்..........................(௨௧)

(கலிவிருத்தம்.)

வேறு.

காணரியவிண்ணவர்கருத்தலைசுரத்தே-சேணிலகுலைசவமூறுதெய்
வவடிவென்ன-வாணவமழித்ததனதாண்மைநிகரான- மாணவர்களெ
ண்ணிலர்மருங்குறநெருங்க... ..... ... ... ... ... ...(௨௨)

மாலினையடர்த்தவுருமாணவர்கள்பேணு-மூலமறையாகமமொழிந்
துபுடைசூழ - வாலநிழனின்றுமெனையாளுடையநாதன்- சீலமுனி
வோர்களொடுசேர்வதனைமன்ன.............. ..................(௨௩)

வித்துருமவெற்பையொளிர்வெண்முகில்வளைந்தா- லொத்துவடி
விற்றவளவொண்பொடிவயங்க- வத்தடவனாக்கணுதயாதபநிகர்ப்ப
த்-தத்துகதிர்வீசியசடாமுடிதயங்க........ ... ...... ... (௨௪)

தண்டளரவாளருவிதாழ்பவளவெற்பின்-வண்டவளநூலுமணி மா
ர்பமும்வயங்கத்-துண்டமதிதாமலாதொடர்ந்துறைவதென்னப் - பு
ண்டரமுகத்திடை பொலிந்தொளிவிளங்க......................(௨௫)

விண்டலமுமாதிரமுமேதினியுமாகக் கொண்டதொருசோதியது
கொண்டுநிறைவெய்தக்- கண்டிகையலங்கியகலங்களினிலங்க - வண்
டகையபட்டுடையின்வற்கலைவயங்க ........................(௨௬)

ஆவிநிகரண்ணலையகத்தினிலிருத்தி - நாவினிறைவற்குரியமந்திர
நவிற்றி- மேவவருபாசவினைவீசியுயர்வாம - தேவனெனுமன்புடை
யதெய்வமுனிவந்தான்.................................. ...(௨௭)

அன்னவன்வரத்தினைவனத்தலகையாகி - யின்னதுறுவோர்களிரு
வோருமெதிர்கண்டார்- மூன்னிறைவனர்ச்சனைபுரிந்தவருண்மொய்
ம்பா- னன்னிமலனன்பனிவனன்றெனநினைந்தார்... ......(௪௮)

சென்றனர்பணிந்தனர்கள்சேவடிமருங்கே- நின்றனரிறைஞ்சிய
வர்நின்றநிலைகாணு-வன்றருள்சுரந்துமுனியங்கவர்களிந்தத்- துன்று
ருவமெய்தவருதொல்வினைநினைந்தான்... ... ...... ...(௪௯)

அன்னவிருதாண்மலரகத்துணெடுநேர - நன்னரியநன்னினை
வின்ன்ணியருஞ்ஞானக்-கண்ணிலிவர்முன்னைவினைகண்டவனாநோ
க்கி- யெண்ணரியசெய்தவமிசைத்தவனிசைப்பான்...... ...(௫௰)

பேதமையடைந்துலவு பேயுருவினின்றீர் - வேதியர்கணீர்முனரு
ள் விடணையசோம- நாதனகர்கார்த்திகைவிழாநலனினண்ணிக்- கோ
தில்பரமற்கொருகொடும்பிழைபுரிந்தீர் ... ... ... (௫௧)

ஏதெனினொருக்குறுமிடத்துடவினுனீ - சோதிகொள்விளக்கெ
டுதுதைந்தநெய்கவிழ்த்தா - யோதுமதெனியுமவனுற்றவதுகண்டு-
மாதரொனவொன்றுமுனாயாதயலினின்றுய்........ ... .......(௫௨)

மெய்படவிளக்கொடுநெய்வீழவதுதாழா-தெய்தரியதீயவினையெ
ய்திடவினுனீ- மொய்படர்புழுக்குடையமுற்றுமுடல்சியே-பெய்தி
ழிபவெய்துடையபெய்துற்வடைந்தாய்... ... ... ......... ...(௫௩)

வாய்ப்பவிதுகண்டுமொரு வார்த்தைபுகலாத - நீப்பரியதீவினை
யைநீப்பரியநீயு-மேற்பறவையுண்ணநெடுவெற்பனையகண்மூக்-சுட்
ப்பிடுவளர்ந்தநெடுநாக்கடிதுகொண்டாய்............ ...(௫௪)

உழைக்கதிரயிற்பாசுடைக்கடவுளுக்குப் - பிழைத்தவர்தமக்கொ
ருபிழைக்குநெறியுண்டோ- தழைத்ததுயரத்தொடு தனித்தள்வில்க
ற்ப- மிழைத்தநரகக்குழிபிடத்தலைவரன்றே .............. ..(௫௫)

மூற்பகலினீவிருண்முக்கணிமலன்றுள் - பற்பலவணங்கிவருபத்
தியதுதன்ணு-னிற்பரியவிவ்வடிவினின்றுவினைதுய்த்துக்- கற்பமொ
ரிரண்டிடைகடந்துகதிசேர்வீர்............. ..... ...... ...(௫௬)

நம்மையெதிர்கண்டுதொழுநாடருநலத்தா- லிம்மைசிவசிந்தனை
யிசைந்திடுவிர்பேயாய்-வம்முருவமாறியருண்மன்னுமெனபாமா- ழ
ம்முதன்மையெம்முதல்வனன்றியெவர்வல்லார் ... ... (௫௭)

அந்தமிலரற்கொர்பிழைபஞ்சலர்புரிந்தோர் - பந்தமுறுதீவினை
கள்பற்றறநினைக்கி- லெந்தையிறைவல்லனிமவான்மகளுநேய- மை
ந்தரிருவோருமதுவல்லரெனலாமோ... ... ... ... ...(௫௮)

அன்னபெருவெம்பிழையகற்றுவனகற்று- னென்னுமதுமறந்தவி
றையேயறிவனன்றி- யுன்னரியவப்பிழையினோர்க்கருள்செய்யானெ
ம்- முன்னவனெனத்தவர்மொழிந்தனர்களன்றே... ... (௩௯)

இவ்வுரைபொய்மெய்மையெனவெங்குநிறைவெய்து - மவ்விமல
னேயறிவனஞ்சியவனேனும்- வெவ்வலகையாகியுழல்வீர்வினையைநா
டித்- தெய்வமுதல்வர்க்கொர்பிழைசெய்யவறியாரால்........(௪௰)

ஓதுமிருகற்பமுடிவாதிபொலிசோம - நாதமுயரன்பரொடுநண்
ணிமுனிறைஞ்சி- யேதமறமுத்திதனையெய்துவதுதீர்வா - லாதியிரு
பாதமறவாமலிருமென்றான்..... ................... .........(௪௧)

என்றுமுனிகூறுதலுமென்றுமொழியாமற் - கன்றும்வினைதீர்வ
தொருகாலமுளதென்று- வன்றவரறிந்தனர்பணிந்தனர்களாடா- நி
ன்றனர்மகிழ்ந்தனர்திகழ்த்துவதையென்றே... .............(௪௨)

[ஐஞ்சீரடிஆசிரியவிருத்தம்.]

வேறு.

காமவெம்பகைகடந்தருட்கடலிடத்தழுந்துந் - தோமகன்றநாற்
சுருதியாகமநெறிதுளங்கா- வாமதேவனுமருங்கின்மாணாக்கனாநோ
க்கி- யாமுரைப்பனகேளுமென்றியம்பன்மேயினால் ... ...(௪௩)

என்னகூறுகோமீதொரற்புதந்தனையந்தோ- முன்னரின்னவர்மு
ப்பொழுதருச்சனைமுயன்று- சென்னிவாண்மதிமிலைச்சியதெய்வநா
யகன்று- டன்னையல்லதோர்சார்விலாத்தகைமையோரோர்நாள். (௪௪)

தோத்திரங்களாற்சுரர்புகழ்சோமநாதத்திற்- கார்த்திகைத்திருநா
ளினெய்கவிழ்த்தவனிவன்முன்- பார்த்துநின்றவனிவனிவர்பண்ணிய
திதுவே-கூர்த்தவெப்பகைப்பேயுருக்கொண்டமையாரீர்.....(௪௫)

செய்திநல்லறமென்றுளோன்செய்துமோவென்று- னெய்தினாற்
றுவாயென்பவனெய்தினின்முடித்தோ- னெய்திமுற்றினோற் கெழி
ற்றுணையாயுளோனன்பு- பெய்துகாத்துளோனவர்க்கும்பெரும்ப
யனொக்கும்.................................................. ......(௪௬)

அரியநல்லறமுற்றினோன்றன்னிலுமதனைப்- புரிதியென்பவன்கா
ப்பவன்புகலிருவர்க்கும் - பெரிதுமப்பயன்பதின்மடங்கென்றனர்
பெருநூற்- குரியமாந்தர்கடிவினைவழிக்குமீதொக்கும்.......(௪௭)

அல்லுலாங்களத்தண்ணறன்பொருள்கவர்ந்தோனை - வல்லனுதில
ங்கவன்றலை துணிப்பதேவழக்கா-லொல்லைகோறலுண்டோன்றனை
யோனிவன்றன்னைக்-கொல்லினின்னவன்முத்தியிற் கூடனிச்சயமே.

கோறலுக்குருதென்னிலக்கொடியவனிருப்பிற்-பேறுசேரினுமிக
ந்துடன்பெயர்வதேகருமம்- மாறணிந்தவர்க்கன்பரோலப் பொருள்க
வர்வோர்க்- கூறநல்லுளாபோதித்துமாற்றுதலுயர்வால்.....(௪௯)

இத்தகைக்கொருகருத்திலராகிலீசற்குப்- பத்தியானெறியான்மி
கும்பரிசினரோனு - மத்தனைப்பிழைத்தோர்களேற் பொருள்கவர்ந்
தெடுத்த- நித்தவஞ்சனைப்பார்ப்பரோ நீள்கதிக்குரியோர் ... (௫௰)

காரணமாதினுமப்பொருள்கவர்வரோவறிந்தோ- ரரணமூன்றெரி
மூட்டினோனாலயத்திடையோர்- திரணமீசற்குவேண்டலதாயினுஞ்சி
ந்தை- முரணுறக்கொண்டுளோரிருணிலையமூழ்குவரால் .. (௫௧)

சிலமாதவரிடைவிடாச்சிவாலயந்தனக்கென்-றேலநோக்கிய நறு
மலரிலைமுதலியவப் - பாலநேத்திரங்கொடுமைதன்பட விழித்தந்நா
ளாலமுண்டவற்கன்றியேயாவர்க்குமாகா.................. ......(௫௨)

கன்னிபாகமெய்ப்பரன்பொருட்காவலுக்குரியோர் - மன்னராயி
னும்யாவரேயாயினுமதியா- ரன்னவான்பொருள்கவரிலீ ரைம்பது
மடங்கு- துன்னுவல்வினைபெறுவர்முன்சொற்றவர்தம்மில் ....(௫௩)

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.]

வேறு.

அலைபுனல்வேணிபண்ணவாலயந்தன்னிலென்றுந், தலைமயிரிறக்கி
க்கோடமருக்கின்மெய்ப்பிடித்துக்கோடல்- குலநிலதயிலம்வார்த்து
க்கோடலாபத்துருமன்-மலசலநீக்கலுந்தம்வாகனத்தேறிச்சேறல்.

அடிசினீரடைக்காயாதியானவைதுய்த்தறுப்பல் - கொடியகாம
திமாதர்கூட்டங்கள்கொடுங்கோள்பொய்ம்மை- கடியபொல்லாவடக்கூ
றல்கம்பளாதியினிருத்த- னெடியபோர்ச்சதுரங்காதிகுறிலைவிகழ்த்
தியாடல்............................... ..... ... ... ... ...... (௫௫)

சொற்றநின்மாலியத்தைச்சோமசூத்திரத்தைத்தாபி- நற்றடநிழ
லைக்கண்டுநடந்துமுன்கடந்துபோதல்-கற்றைவார்சடையானுக்குங்
கதிர்ப்பலிபீடத்துக்கு - முற்றநன்னடுவேசேறலொழிந்தவருயர்ந்
தோரன்றே........ .......................................... ...(௫௬)

ஆதியாலயத்துட்கூவலாதியாதியதீர்த்தத்தைத்- தீதுபோய்ப்புரி
தலந்தச்சிறப்புறுஞ்சிவதீர்த்தத்திற்-கோதறுமகத்தத்தோடுமூழ்கு
தல்குற்றமென்றே-யோதியவாகமங்களுபனிடதங்களன்றே... (௫௭)

ஈங்கிவர் துயரம்பாரீரொன் றுமாணுக்கர்க்கோதி - யோங்குமஞ்செ
ழுத்தைநாவினுச்சரித் துளத்தினுதன் - பூங்கழல்வைத்துத்தன் றன்
பொருவிலாச்சிரமம்புக்கான் - நீங்ககல்வாமதேவத்தெய்வமாமுனிவ
னம்மா... ........................................................ ...(௫௮)

ஐந்திரவேதநீதிச்சயிமினிமுனிவகேட்டி-யந்தணர்பொருளிலிசனரு
ம்பெரும்பொருளினுண்டா- முந்தியவியல்புகாண்டிமொழிந்தவஞ்
ஞானந்தனூல்வர்த்தீங்ககலவின்னும்வகுத்ததோர்வழியுண்டன்றே
புண்டரீகப்புரத்துப்பொருந்தியவினையைநீக்கி- மண்டியபயனை
நல்கவல்லதீர்த்தங்களோர்பதி- துண்டெனவுரைத்தான்ஞாலமுய்ந்தி
டக்கருணைபோதக்- கொண்டருமறைகளெல்லாம்விளக்கிய குணக்கு
ன்றனன் ........................................ ..........(௬௰)

சோமனாதச்சருக்கமுற்றும்.
பாயிரம்உட்படச்சருக்கம்-௫-க்கு-
திருவிருத்தம்— ௪௱௭௪.
திருச்சிற்றம்பலம்.

உ
திருச்சிற்றம்பலம்.
ஆறுவது

# தீர்த்தச்சருக்கம்.

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.]

அரவுடனிதழிசூடிமன்னறன்பொருளைவஞ்சக்-கரவினிற்கொண்
டோரெய் துங்கடுங்கொடும்வினைதொகுத்துப் - பரவினம்பரவுந்தில்
லைப்பதியிடைக்கதிகனல்கு-மூராறுதீர்த்தமீரைந் துள்ளவையுரை
க்கலுற்றும் .............................................. (௧)

பராசரன்றனையன்பாதஞ்சயிமினிபணிந்துபோற்றித் - தராதல
மென்னுந்தில்லைத்தலத்தினீரைந்துதீர்த்தம்- புராதனவுளவென்று
யப்புனிதமாகியதீர்த்தங்கள்-விராவியதானப்பேர்கள்விளங்குறவிள
ம்புகென்றான்.......... ............................................ (௨)

பாரிடமென்னுந்தில்லைப்பதியினிலெங்குந்தங்கு- நீரொலாந்தீர்த்
தமாதனிச்சயமதனுண்முன்னங்- காருறுகண்டன்கண்டங்காதலிற்ப
யந்துயர்ந்த- வாரியைக்குலகமுய்யவருளினாலருள்செய்தானால். (௩)

பொற்கிரிபுண்டரீகபுரத்தினிற்றீர்த்தத் துண்மை - பெற்கிதுதெரிவதல்லால்யாவருமுணரமாட்டார் - முற்கிரிவளைத்தெடுத்தமுதல்வனுக்கன்புபூண்டு - நிற்குநீகேட்கலாகுமென்முனிநிகழ்த்துகின்றான்.

சித்தெனவசித்தைநீத்தோர்தெளிந்தபொன்மன்றஞ்சேர - உத்தரத்துள்ளதென்றுமுயர்ந்ததீர்த்தத்துயர்ந்த - தெத்திசையோரும்போற்றுமெழிற்சிவகங்கையார்க்கு - முத்தியைநல்குதீர்த்தமுதலருட்டீர்த்தமாகும்.......................................(௫)

நடமிறைபிரியாதோங்கு நற்றில்லைநகர்தனக்கு - வடகிழக்கிடையோர்தீர்த்த மறிகடலதுவாங்கொன்றைத் - தொடையவனன்றியாருமுணர்கிலாத்தொன்மைதன்னை - விடரடர்குய்யதீர்த்தமெனப்பெயரெய்திற்றுமால்.......................................(௬)

இறையிறைவிக்குக்கூறவிறைவிகந்தற்கியம்ப - வுறையயிற்கந்தன்பாற்சனற்குமாரற்குரைப்ப-முறைமையினவன்பாற்பெற்றுமுனிவர்தேவர்க்கிசைத்தே- னறையுமக்குய்யதீர்த்தப்பெருமையாரறியவல்லார்.......................................(௭)

நிணாக்கடலெனுமத்தீர்த்தஞ்செப்பிடிற்றிசைகடோறு - முணாத்தயோசனையினெல்லை யுணாத்ததெவ்விடத்துளோரும் - வணக்கருப்பவங்கணீங்கி மாசிமாமகத்துமூழ்கி-னணாக்கரவசைத்தநம்பனருட்பதம்பெறுதறிண்ணம்.......................................(௮)

கொலைத்தொழில்வடிவோபொய்க்குக்கொள்கலந்தானேவெல்லை, தொலைத்தவெங்களவுவந்து தோற்றியவிடனேதீயோர்-மலைத்ததீவினைகள்வாழும் வாழ்க்கையோவென்னமாறு -நிலைத்தனிநிணாயமெல்லாமிசைபெறவருமோர்நீசன்.......................................(௯)

மாசிமாமகத்துச்சொற்ற வணாயறையில்லாத்தீமை - நீசனங்கவனுநன்கு நினைந்திடாளதனின்மூழ்கித் - தேசுறமுத்திசேர்ந்தான் செப்புவதென்னேவென்று - மேசுவதில்லாத்தீர்த்த மீதிரண்டாவதென்ப.......................................(௰)

தேவர்சூழ்மன்றினுக்குத்தென்றிசைநீசரர்தி-யாவருஞ்சிவகங்கைப்பாலெய்திடப்பெறார்களென்று - தாவிலாச்சிரமத்தில்லோர் சாதிபேதத்தோர்மூழ்க- மூவிலைநனியாலீசன் முயன்றுசெய்தீர்த்தமுண்டால்.......................................(௰௧)

ஆதிரைமதிதேய்பக்கத்தட்டமிமாதத்தோற்ற- மீதுறுமருக்கவா
ரம் விதிபாதங்குருவாரங்கூ - டோதியபறுவமூன்றுதினமுறுமோ
ர்நாண்மூழ்கி- மாதவர்க்கிசைந்ததானம்வழங்கினோர்முத்தராவர்.()

எப்பரிசோர்க்குந்தீமை யிரிந்திடவிறைவன்செய்பு- மப்பெருந்
தீர்த்தமுந்நாளாகமந்தன்னுள்வேங்கை - மெய்ப்பதங் காணலாலே
வியன்புலிமடுவென்றுள்ள - தொப்பிலத்தீர்த்தமூன்றுந் தீர்த்தமா
புரைத்ததீர்த்தம்........ ..................................(௰௩)

குழைபொலிஞானச்செந்தேன் குனிக்குமம்பலத்துமேல்பான்-
மழமுனிபூசைசெய்யும்வளர்புலிச்சரத்துமுன்னர்-விழைவுறவுளத
தின்பேர் வியாக்கிரபாததீர்த்த - மழகுறவதனைவானோர்சேவைசெ
ய்தகலாரொன்றும்... ...... ...... ... ...... ............ ...(௰௪)

வெய்யவன்சிறந்தவாரம் விதிபாதயோகந்தத்திப் - பையராத்தி
ங்கடன்னைப்பருதியைவிழுங்குங்கால-மொய்யலரத்தீர்த்தத்தின்மூழ்
கித்தம்வகைக்கிடான- செய்பதானங்கள்செய்தோர்தீவினைமுழுதுந்
தீர்வர்.............................................. .....(௰௫)

கன்னிஞாயிற்றின்வானக்கறைமதிகுறைபக்கத்து - மன்னுமட்ட
மியின்மூழ்கித்தானமும்வழங்கியங்ஙன் - முன்னவற்பணியினோர்க
ணைாதினமூப்பகாலந்- துன்னிறப்பொழியுநாலாஞ்சொற்றகுந்தீர்
த்தமீதால்........ ...................................... .... (௰௬)

சிதம்பரந்தனக்குமேல்பாற் றிகழவோர்மடமுஞ்செய்து - பதஞ்
சலியிருந்துபூசைபண்ணலாலவன்பேரோற்ற-விதந்திகழனந்திசத்து
முன்னரோவிண்ணோர்சூழற் - புதம்பெறச்சேவைசெய்யும்பொலிவு
ளதனந்ததீர்த்தம்.................................. ......(௰௭)

பருதிவாரங்கடோறும்பறுவங்கடோறுந்தீங்கு - வெருவவாதிரை
யினன்னுள்விதிபாதயோகம்பாந்த - விருசுடர்விழுங்குகால மனு
வாதியித்தீர்த்தத்தி - னருளைநாடினரோன்முத்தரமறையினீதஞ்சாந்தீ
ர்த்தம்............................................ ... (௰௮)

பெருமைகூரனந்தீசத்து மேற்றிசைப்பிலத்துனின்றும் - வரு
பதஞ்சலிமுன்னன்பால்வந்துதோன்றிய தோரொல்லை- பொருவருந
ன்குநல்கும்புண்ணியநன்னுந்தீர்த்த- மருவினையெவையுநீக்குமத
ன்பேயர்நாகசேரி.......................................... (௰௯)

அருளுடன்கன்னிமாதத்தைம்பறுவங்களாதன்- மருவுமாயிலியம்
வெய்யோன் வாரத்தினுதலந்தக்-குருமலர்த்தீர்த்தமூழ்கிக்கூடியதா

ணஞ்செய்தோ - ரொருவுவர்வினையையாருந் தீர்த்தமீதுணர்வான்மி
க்கோய்.................................................(௨௰)

மட்டிலான்மன்றிறுக்கு வடகுடதிசையின்வானோ - ரிட்டமாம்
பிரமதீர்த்தத்தெழிற்றுறையுண் மதிதேய்பக்கத் - தட்டமிமனுவினுதி
யுகாதியினன்பான் மூழ்கிச்-சிட்டர்பாற்றானஞ்செய்தோர்சிவகதிசெ
ன்றுசேர்வார்.........................................(௨௧)

சிறந்தவித்தீர்த்தவாவித் தீரத்திற்பூசைபோம-நிரந்தமந்திர நவி
ற்றி நிசழ்த்தினொன் றனந்தமங்க- ளுறைந்தவீசனைப்பணிந்தாலுங்
வியதெய்துமின்பா - லறைந்தவிப்பெரியதீர்த்த மதனையேழாவ
தென்ப.................................................(௨௨)

மதாசலமுரித்தோன்வைகுமன்றத்துவடபாறன்னிற் - பிதாமகன்
பிரிவாய்வைகும்பிரமசாமுண்டிமுன்னர் - சுதாசனர்புகழோர்தீர்த்
தந்தோய்ந்தவர்தம்பாலீசன் - சதாமகிழ்ந்தருளானுடந்தான்சிவப்பி
ரியையாமால்..........................................(௨௩)

மாதங்கடன்னிற்செய்யோன் வாரங்கடோறுமூழ்கி - னுதங்கடந்
தஞான நாடகனளவிலாத- வேதங்கடந்தநம்பன் வீட்டின்பந்தருவ
ன்சேர்ந்தோ-ரோதங்கடங்காதீர்த்தமெட்டாவதெண்ணுங்காலே(௨௪)

விளங்குமிக்கதற்குத்தென்பால்வியாக்கிரபாதனல்கு-முளம்பரம
ற்களித்தவுபமன்னியற்குச்சென்னி - யிளம்பிறைவனைந்தோன்றந்த
திலகுபாற்கடலென்றெங்கும்-வளம்பெறப்புகழுந்தீர்த்தமதனையார்
வழுத்தற்பாலார்.......................................(௨௫)

ஓதரும்பரமஞானத்துயர்ந்துபமன்னியன்முன்-மாதவர்வானோர்கட
ளுவரம்பிலாமகங்களாய்ந்து-சீதரன்கண்ணனவ்வாசுதேவன்றன்சென்
னிதன்னிற்- பாதம்வைத்தருளினனப்பாற்கடலாடியன்றே...(௨௬)

மேற்கடவுளர்கள்போற்றவியன்முனிபுண்டுமூழ்கும்- பாற்கடற்
றீர்த்தஞ்சென்று படிந்தவர் பயன்களெல்லா-மாற்கடவளாயுரித்தோ
ன்வழங்குறப்பெறுவரீது - நூற்கடன்முறையாலொன்பதாவதாறு
வலற்பாற்றே..........................................(௨௭)

ஆனந்தசபைக்குக்கீழ்பாலானந்தவடிவமான- வானந்தகூவலா
னளதனைமுன்பார்த்துப்பார்த்தே - யானந்தநிருத்தஞ்செய்யாதின்
றனரழிவிலாத-வானந்தர்பரமானந்தகூவமென்றதற்குநாமம்(௨௮)

கொடியிடைபரமானந்த கூவமென்றுருக்கோடீர்த்தம் - படியி
டைநவதீர்த்தங்கள் பற்பலதீர்த்தமற்று-மடியிசைவந்துதாழ்ந்திங்கு

லகுறுமென்றுலர்த்த- நெடியவான்றீர்த்தம்போலநினைத்திடி னிகழ்த்தில்யாதோ.......................................................(உகூ)

நவமியிற்புகர்வாரத்தினற்சுட்டிரண்டைப்பாந்தள்-கவர்தருநாளின்மூழ்கிற் கடுங்கொடுவினைகணீங்கும்- புவமதிவளர்பக்கத்துப்புகர்வாரந்தன்னிலொவ்வொன்- றிலையுறுநாளின்மூழ்கினெய்தொணுநலங்களெய்தும்.......................................................(ருய)

பொருவிலைப்பசிமாதத்துப்புதுமதிவளர்பக்கத்து - வருநவமியின்மூழ்கில்வருங்கவிகல்வியெய்து-மொருதினமிடைவிடாமலோராண்டோருமூழ்ந்தினெல்லை - யருடருமந்நீருட்கொண் டவர்கவிக்கரசராவர்.......................................................(ருந)

சுரர்குருமுன்னோராண்டு தாநியமத்துநாளும் - வரனருளந்நீர்கொண்டேவாக்கிற்குமன்னனானன் - றிரமிதுமலடியன்பாற்றிருந்தவோராண்டேகொண்டா - லரனருட்கன்பனுஞ்சேயலைவுறப்பெறுவளன்றே.......................................................(ருஉ)

யாவைபுங்காமியாமலியல்பினுட்கொண்டோர்வீடு-மேவுவர்மாசின்னின் வெண்மதிவளர்பக்கத்துத்-தாவிலாவிளக்கங்கொண்டசதுர்த்தசிமூழ்கிற்றீர்த்த - ராவரீனாந்தாந்தீர்த்தமாமிஃதனறயினம்மா.

ஐந்திரண்டாமித்தீர்த்தத்தாடினோர்முத்தரன்றிச்- சிந்லதசெய்தைமாதத்திற்றேய்மதிக்கிறுதிநாளின் - வந்திவையடைவின்மூழ்கின்மறைமுடிவிதுவென்றேது- மந்தமில்லாதமுத்தியடைவதற்ல கயமின்முல் ... ... ... ... ... ... ..... ... ... (ருச)

இன்னனதீர்த்தத்துன்மையுமையவட்கெமையாளையன் முன்னருணெறிபயபானுமொழிந்தனன்முவாத்தில்லை - நன்னகருமறையோரொங்கணம்பலைப்பிழைத்ததன்றிப் - பின்னறியாதுசெய்தபிழையிவைமூழ்கிற்போமால் ... ... ... ... ... ... ......(ருரு)

சுராசுரர்முனிவராதிசொல்லுமெல்லோருமன்பா- னிராமயன்பரமானந்தநிருத்தமுன்னுருத்தரித்த - பராபரலிங்கந்தில்லைப்பதியினுண்டாக்கிப்போற்றித்- தராதலத்துயர்ந்தாரன்னசாற்றுவன்றெருகுத்துக்கேட்டி.......................................................(ருசா)

பொதுவினிற்றேம்பான்மாயோன் போற்றிமுன் கண்டெல்லோர்க்கு,மதிகமாயினனத்தானமரீச்சுரமதற்குத்தென்சார்,பதுமையானங்கணன்குபடைத்தவக்கமலேசத்தை - விதியினிற்பணிந்தோர்சிந்தைவிரும்பியதெய்திவாழ்வார் ... ... ...... ... ..... (ருஎ)

மற்றதன்றென்பாலன்பால்வலாரிமுன்கண்டுதிங்கு- செற்றவிந்தி
ரீசமீதிற்றெக்கணந்தன்னில்வன்னி- முற்றகக்கண்டவக்கி னீச்சரமு
யங்கியேத்தப்- பெற்றவர்நினைத்தவெல்லாம்பெறுவரங்கதற் குத்தெ
ன்னர் ... ... ... ..... ... ... ... ... ... (௫௮)

அருக்கன்முன்கண்டிறைஞ்சுமருக்கேசம்பணியிலெந்நோய்,வரு
க்கமும்போமதற்குவடகிழக்கிடைநாவல்லி,யிருட்கெடக்கண்டவோங்
காரேசத்தைநேசித்தோர்நூற்- பெருக்கிடைமுழ்கிவாக்கும்பெறுவ
ரங்கதற்குத்தென்சார் ....... ......... ... .... ... ...... ......(௫௯)

வருணன்முன்பிரமகத்திமாற்றுவான்கண்டிறைஞ்சு - மருள்வரு
ணேசமுன்னரறையரீச்சுரத்துக்கீழ்பாற்- றிருவளர்நந்தியெம்மான்
செய்தநந்தீசஞ்செம்பொன்- னுருமலிபொதுவிற்றென்பாலுள்ளன
வுளாப்பக்கேண்மோ... ...... .............. ... ... ... ...(௬௰)

கந்தன்மாமுகன்வசிட்டன் வாமனன்கபிலன்கற்க - னிந்திரசித்து
வாலிதாரைபோடெமன்சாமுண்டி- சுந்தரவாலகில்லியவக்கிரி சுவே
தகேசன்- கந்தமார்குறிகள்கண்டோரிவைநிற்கச்சபைக்குமேல்பால்(

அகத்தியன்கடவுட்டச்சனனந்தன்பாரத்துவாசன் - மிகத்திகழ்க
மடன்வாயு வியாக்கிரபாதன்வேதா - மகத்தொழிற்குண்டினன்சாத்
திகன்வற்சன்வாட்களன்றீங்-குகத்திகழ்கவுசிகன்வாலிகனுருப்பசியெ
ன்றுள்ளோர்......... ... ....... ... ... ... . ..........(௬௨)

சித்துருக்கோசங்கண்டு சிறந்தவர்வடபாறன்னி - லத்திரிவாமதே
வனளகையோன்பிருகுமாணி- பத்திரன்கணன்வியாதன்பத்திராகவ
னுல்வேதக் - கொத்தினர்கணமன்றெய்வச்சதானந்தன்குறிகள்செ
ய்தோர்......... ...................... ............ ...........(௬௩)

எண்டருமிவர்களன்றியளவிலோரின்னசெய்தோர்- கண்டவர்பே
ராவுண்மைக்கதிசிவலிங்கநாம- மண்டலத்திடைவழங்குமாதவம்புக
ழிரண்டு-முண்டதனுலெல்லோர்க்குமுறுதிமற்றநில்லென்றுண்டோ

பெருமறையுணர்ந்துஞானம் பிறங்கியமுனிவஞ்சக் - கருநெறி
மாற்றவென்னுங் காதலோர்செய்தவெல்லா-மொருவழிதொகுத்து
ணாத்தேனுனக்குமிச்சைவலிங்கத் -திருவுருக்கண்டிறைஞ்சிற் சிவக
தியடைதறிண்ணம் ......... ... ...... ...... ... (௬௫)

அன்றியுந்தில்லைதன்னிலுறைந்தபியாதுசெய்த-நூன்றியவினைதனி
ந்தச்சுடற்சிவலிங்கநேச- மொன்றியகருத்தாற்கண்டங்கிறைஞ்சினே

ொழிவர்செம்பொன் - மன்றுடையார்ப்பிழைத்த லுய்த்தன்றிமா
ருதன்றே .... ... ... ...... ... .. ............ ... (௪௬)

புனிதற்குப்பிழைத்தாற்கோடி புண்ணியஞ்செய் துநீக்க- மனித
ரோவானோர்யாரோவல்லவரில்லையிந்த- நனிதருமிலிங்கத்துக்குணற்
சிதம்பரம்போலெங்கு- மினியவிலாந்துதீர்த்தத்திலகுமச் சைவக்
கங்கை... ... .... ... ... ... ... ... ...... ...(௪௭)

பத்தராயுள்ளார்தீர்த்தப்பரிசுகேட்டாடவென்றுஞ் - சித்தமாதீர
விசஸ்சிவகங்கைவடிவாய்நின்ற- னைத்தகையென்கோவீரேழுலகத்
திலெத்தீர்த்தத்து- முத்தமதீர்த்தமீதுசத்தியவுரையாமன்றே (௪௮

நற்பதியவற்றுட்டில்லைநகர்பெரிதிமையோர்தம்முட்-பொறபொ
றாதன்மிக்கோன்புவனத்துட்டீர்த்தந்தம்முன்- முற்படவுயர்ந்த
தியான்முன்மொழிசிவகங்கையென்று- மற்புதத்திவற்றுளொவ்வொ
ன்றனையர்க்குமளிக்குமுத்தி..... ... .. ... ... ...(௪௯)

இத்தகைமூன்றுமோர்பாலியைந்ததென்றலடைந்தோர் - முத்தி
யித்புகுவதென்று மொழிந்திடவேண்டுமோவிம்- மைத்தவெம்பிற
பொழிப்போர்வருந்தியுமன்றுளொன்று - முத்தமனுடுந்தில்லையுறுவ
தேயுறுதியாகும் .... ... ... ... ... ... ... ......(௫௰)

மடலவிழ்பொழில்சூழ்தில்லை மாணகருள்ளதிர்த்தம் - படரொ
ளிச்சைவக்கோசப்பரிசிவற்றுண்மையுன்ற- னிடமுறுகாதல் கண்டங்
கிசைத்தனமென்றன்ஞானச்- சுடரொருவடிலமான சுகன் றனைப்ப
யந்ததுயோன்... ... ... ... ... ... ... ... (௫௧)

திர்த்தச்சருக்கமுற்றும்.

{ பாயிரம்உட்படச்சருக்கம்- ௭-க்கு.
திருவிருத்தம்- ௫௱௨௰௮. }

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

# திருச்சிற்றம்பலச்சருக்கம்.

[ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.]

தேடரும்பலந்தரும்பெருந்தீர்த்தத்தின் பெருமை-கூடுமோறுரைத்தனமினிக்குறிக்கரிதான-வாடகஞ்செறிந்திலங்குசிற்றம்பலத்துண்மை. நீடுமாதரம்பெருகுறநிகழ்த்தலுற்றனமால் ... ... ... (௧)

வாதராயணன்புகன்றிடமகிழ்ந்துமெய்ஞ்ஞானப்-போதமாதவச்சயிமினிபுளகமெய்போர்ப்பத்- தாதுலாவியதாமரைத் தடங்கணீர்பொழிப- மீதுகைத்தலங்குவித்தொருவினாவுரைசெய்தான் ... (௨)

நாரணன்கமலாசனன்முதலியர்நாடும்- வாரணங்குறவளர்முலைமலைமகளுடனெங்- காரணன்கயிலைக்கிரியுளனெனக்கழறு- மாரணங்களாகமபேதமுமனைத்தும் ... ... ... ... ... ... (௩)

சொற்றதின்னவையன்றியுஞ்சுராதிபர்முனிவர் - மற்றுமுள்ளவர்யாவருங்கண்டெதிர்வணங்கப்- பெற்றுமீடரக்கண்டன மெண்டகுபெரியோ - யெற்றைநாளினுமுளதிற்கில்லையாமையம்... ...(௪)

அன்றியுஞ்சிவபரம்பரனனவரதமும்பொன்-மன்றினீடருள்வடிவமாய்மலைமகள்காணத் - தன்றனிச்சையிற்றழைத்தவானந்ததாண்டவமே- யென்றுமெய்ப்பறப்புரிகுவனென்றினிதிசைத்தாய்... (௫)

துன்றுபேரருளுடையநீதுகளறப்புகன்ற - தென்றுமுண்மையேயாயினுமுணர்ச்சியின்மையினா- லின்றெனக்கையமிவ்வுரையீந்தமைதீர- வுன்றனித்திருவாக்கினாலுரையெனவுரைத்தான் ... ...(௬)

மதியினாலுயர்சயிமினிவாசகங்கேளா-வதிசயத்துடனருளொடுமுகமிகமகிழ்ந்து - விதிவிடாமறைநெறியெலாம்விளம்பியவாக்கான்-முதிருமாதவனிறைதிருவருட்கடன்முயங்க ... ... ... ...(௭)

மூலகாரணமாகியமுதல்வனைமுன்ன-மாலநீளிலைப்பாயலோனன்பினால்வினாய- தேனுமிவ்வுரைநன்றுநீகேட்டனையெழில்கூர்-சீலமாதவகேளெனச்செப்பன்மேயினனால்... ... ... ... ......(௮)

தெரிவரும்பெருமறையெலாந்திரண்டதோவுயர்ந்தோர் - புரியுந
ல்லறவடிவமோபொலிவுறுமமுதங்- கிரியுருப்படைத்தெழுந்ததோ
இளக்குமாறென்னே- வரியயத்கரியானுறையணிக்கயிலாயம் (௯)

படியிலக்கிரிவிரைந்துறப் பணிந்துசெல்லிமையோர்- முடிதய
ங்குபொற்றொடைமிகவீழ்ந்தனமுயங்கு-நெடியகோடரப்பாதவநி
றைமலர்பூத்த-கடிவிளங்கியகடுக்கையங்கானமேயனைய........(௰)

முருகர்தாதைதன்சேவித்துணைமுறைமுறையன்பாற் - பருகுமா
றெதிர்பாடுநர்பாட்டிசைதன்னூற் - பொருவில்வெள்ளியங்குவடுகள்
புளகமோடிளகி-யுருகியோடல்போன்மருவுவெள்ளருவிகளுளவால்

கங்கைபாயிரமுகத்தினாற்கண்ணுதற்கலந்த - பொங்குபேருரை
பொருளெனப்பொலிந்தகாளிந்தி - நங்கையெண்ணிலா முகத்தினு
ணண்ணலேபோலுந்- துங்கமாமதந்திசைதொறும்பெருகியகுழல்(

கடிகொணெய்தல் செங்கமலங்கணிலாநிலாகலந்த - நெடியவா
ன்சுனையுமையிறைநிகர்த்திடும்பவளக்- கொடிபடர்ந்தவெண்சிகரியி
ற்குதிகொள்பேரருவி-யடிகள்வேணியுங்கங்கையுமனையசில்லிடங்கள்(

பாகசாதனன்கடவுளர்பணியுமக்கயிலை - நாகமீதகல்வெள்ளிடை
நண்ணிதண்ணரிய-மாகமுடுறவளர்கரிதிகிரிபாற்கடல்வாய்-மேகசால
ங்களுலாவியவியப்பினைநயக்கும்........................ (௰௪)

விஞ்சுவெண்பளிக்ககலிடைவிரும்பரம்பையர்செம் - பஞ்சுதோ
ய்பதச்சுவடுசெம்பதுமமென்றயல்சூ - ழஞ்சுனைக்கணாலமொழித்த
ளிகண்மொய்ப்பனபார்த்-திஞ்சொலன்னவர்குறுநகைவளமுறுமொ
ருசார... ... ............... ... ... ... ... ...(௰௫)

இறுதியில்லவற்றொழக்கிரியெழுந்தவெண்சுடர்மேற் - குறுகிமீ
ண்டெழும்விண்ணவர்விமானகோடிகடா- முறுகுமுழிநாட்பெருங்
கடன்மூழ்கிபுழுதித்து-மறுவிலாதவரிரதமேல்வயங்குவபோலும் ()

வயங்குமண்டமேலக்கிரிபொளிபெழன்மார்பிற் - புயங்கனம்பி
கைக்கன்புசெய்வதுபொருள்வேணி-யியங்குகங்கையாள் பிறந்தகத்
தெழுதல்போன்றிடும்வான்- முயங்குதாரகையந்த நீர்மொக்குளே
யொக்கும்... ... .... ... ... ... ... ... ... (௰௭)

விடிலாப்பெருங்கடவுளர்விமானமொன்றேடொன்- றூடுதாக்கி
யமுழக்கமுமொடுக்கமேல்கிளருங் - கோடுகட்டியமுகலிகர்குஞ்சர
முழக்குந்- தேடுமாற்கரியானுறைதிருமலைச்சூழல்...... ...(௰௮)

விடையுயர்த்தவற்றொழுவெழுவிண்ணவர்மகுடத்-தொடையுமால
யரூர்தியிற்றுலைந்துதீர்சிறகுங்- கடவுளீசனூர்குஞ்சரக்களிமதச்சு
வடு-மிடைவிடாதனவக்கிரியெழில்வழியெல்லாம்... ...... ...(௰௯)

அண்டர்நாயகற்பணிதரக்காலமென்றணைந்து - கண்டபேர்புகன்
மொழிவருங்கடவுள்செங்கை - முண்டகங்கட்குமுகவனசங்கட்கு
❋ முமதி-கொண்டபேரொளியிரவியோகுவிந்தலர்ந்தனவால்.௨௰

அடியிறைஞ்சிமீள்கடவுளரமலனின்றெம்பான்-முடிதுளக்கினன்
பார்த்தனன்முகமலர்ந்தனனேனோர்- படியிலாமொழிபகர்ந்தனன் மகி
ழ்ந்தனனென்னு-நெடியபேரொலிமறையொலிசிறிதெனநிமிரும்.(

கருதுநாரதராதியர்கானயாழிசையுஞ்- சுருதியோசையுமந்தரது
ந்துமிமுழக்கு-முருகு மெய்த்தவத்தடியவர் சிவாகமத்தொலியு- ம
ருவுமேழ்கடலோதையின்வளர்ந்தெழுநாளும்... .. .........(௨௨)

உலகினுள்ளனவொலியெலாமோரிடத்தெய்தி - யிலகுகோபுரம
ண்டபந்தெற்றிகளெயில்க- ளலகின்மாளிகைகுளிகை யாயினவென்
னக்- குலவுகின்றதக்கிரியினெம்பரம்பரன்கோயில்...........(௨௩)

அண்டகோளகைப்பரப்பெலாமலர்கதிர்பரப்புஞ்-சண்டசூரியரள
விலார்சாரினங்கவர்முன்- கண்டதாரகைக்கணமென வொளிகெடச்
சோதி- கொண்டமண்டபமொன்றதக்கோயிலினுளதால்......(௨௪)

இன்னபேரொளியின்னதொட்பெனவிசைக்கரிய-வன்னமண்டப
மன்பர்தம்முள்ளமோவேதச் -சென்னியோவறியோமதிற் றிகழரிய
ணைமேற்-றன்னேருமையுடனருட் டலைவன்வீற்றிருந்தான் (௨௫)

அடர்ந்ததாலவட்டங்களு மொலியலுமசைபத் - தொடர்ந்தவீச
ணிகோலெழச்சுடர்முடிக்கங்கைத் - தடந்திரைக் கொழுந்தெழுந்
துவீழ்தகையெனப்பாசங் - கடந்ததொண்டர்கண்மருங்குறக்கவரி
மேலிரட்ட...... ... ... ...... ... ... ... ... .....(௨௬)

தோடலர்ந்தபொன்னிதழியந் தொங்கலுந்திங்கட்- கோடலர்ந்த
வெண்சோதியுங் கொடும்பணிச்சுடிகை- மாடலர்ந்தசெம்மணிகளுங்
கங்கையும்பவளக்-காடலர்ந்தெனச்சடாடவிக்கதிர்திசைவிளங்க.௨௭

மீதுசாத்தியவிளம்பிறை விளங்கியதவளச்- சோதிதாக்கியதென
நுதற்புண்டரஞ்சுடர - மாதுபார்த்துள மகிழ்தரவயங்கு செங்கனி
வாய்ப்- போதுபூத்தபுன்முறுவலுஞ்செவ்வியும்பொலிய ...(௨௮)

---

❋ முழுமதியென்பது,—முமதியென்று விகாரமாயிற்று.

செழுங்கதிர்க்கருங் கொடியெனப்புரூரங்கடிகழ- மொழிந்தபே
ரொளியிடைவிடாதடையுமுச்சுடர்வந் - தெழுந்தலர்ந்தசெந்தாம
ரையெனவருளெவர்க்கும்- பொழிந்திடுந்திருநயனமும் வதனமும்
பொலிய ... ... ... ... ... ... ... ... (௪௯)

பேதியாவொளிப்பரிதியர் பன்னிருபெயரு - மேதிலுற்பவித்தா
ரிவற்றன்றியென்றிசைக்குஞ்-சோதிவீசிபகாதிடைக்குண்டலச்சுடர்
க- ளாதிவாண்முகத்தாமரைக்கயலொளியெறிப்ப... ... ...(௫௰)

அண்டம்யாவையுமளித்தருள்கண்டமுமணிகண்-மண்டுமேருவுஞ்
சிறிதெனவளர்புயநான்குந்- துண்டவெண்பிறைநுதற்றிருத்துணை
முலைச்சுவடு- கொண்டசாந்தணிமார்பமுமாரமுங்குலவ ......(௫௧)

வரதமுந்திகழபயமும் வயங்குறத்தயங்கும்- பரசுமானுடன்பங்க
யச்செங்கைகடீதொளிர - விரவுபேரொளித் தமனியவாடைமேல்விள
ங்க-விரவியெண்ணிலரிருப்பெனச் சேவடியிலங்க.... ........(௫௨)

வாட்டமுந்துமாற்கரும்பணிவடிவுமாற்றி - நாட்டமுந்தருங்க
ளிற்றணி வதனநாயகனுந்- தோட்டருந்துழாய்வராகமித்தாநிலமெ
டுத்த- கோட்டைமுன்பறித்தருளயிற்குமரனுஞ்சூழ... ... ...(௫௩)

மிடைந்தவைம்பொறி வென்றருள்விளைவினுளுருகி - யுடைந்தவு
ள்ளமும் விழிசொரிவெள்ளமுமுலகுங் - கடந்தசெய்கைபுங்கம்பமு
ம்புளகமுநீறு- மடைந்தமேனியுமுடையமெய்யடிவர்மகிழ...(௫௪)

சடைவிளங்கியமவுலியுந் தடம்புயநான்கும்- விடமிலங்கிய கண்
டமும்விழியொருமூன்று- முடையநாயகனுவந்துறை யுள்ளமும்ப
டைத்துத்- தொடருமன்புறுகணாதிபர் தொகுதிகள்விளங்க...(௫௫)

நடமலர்ப்பதத்தருள்பெறு நந்தியெம்பெருமான் - சுடர்மலர்க்க
ரம்பிரம்பினாற் சுரர்கணத்தொகுதி- யிடைநெருங்குப நீக்கிநின்றில
குகோபுரத்துக்-கடையினிற்பவர்பெயபொதிர்கைகுவித்தியம்ப(௫௬)

படைத்தவின்னணபடைப்பதாய் நினைவவின்னனநீ - யடைத்தவி
த்தொழிற்காவணவருளுதியளியார்-விடைத்தனிக்கொடியாயென வி
ழூந்தெழுந்திறைஞ்சா- நடைத்திகழ்த்தமாமறைகொண்டு நான்மு
கன்பரவ.................................................... .... (௫௭)

அரக்கராற்றலுந்தயித்தியராற்றலுமுலகிற் - றரக்குமாற்றலுள்ள
னவெலாந்துரந்துநின்னருளாற்- புரக்குமாறெலாம்புரந்திடா நின்
னருளாற்- காக்குநாதவென்றச்சுதன்கைகுவித்திசைப்ப...(௫௮)

முற்றுமாகியதிருவுருமுழுதையும்பாராக்-கொற்றவேற்பினிற்சிற
கினைக்குறைத்தும்வாய்மடித - லற்றவச்சிரன்மலர்பொழிந்தாயிரங்
கண்கள்- பெற்றபேறெலாம்பெற்றுமுன்பணிந்தன்புபெருக (௩௯)

தணிவிலச்சமோடந்தக னிறைஞ்சிடச்சலதி- மணிகடேவினன்வரு
ணன்முன்வணங்குறமார்பி- னணிபிறழ்ந்தனதிருத்தநின்ற அளகையர்
கோனும்- பணியமற்றையநால்வருந்தாழ்ந்தனர்பரவ... .. (௪௰)

அந்தமொன்றுமில்லாதவ னணிந்தவெண்ணீறுஞ்-சுந்தரங்களுங்
குறையுளாந்துகளிலாவடிவுந்- தந்தபேரொளிப்பெருமையாற் றம்
மொளிமழுங்கு- மிந்துசூரியரிருமருங்கிறைஞ்சிநின்றேத்த...(௪௧)

பெருத்தவெம்பவப் பிணிக்கொருமருந்தெனப்பேணி - மருத்து
வாதியரிருவரும்வணங்கினர்பரவ- வருத்திகூருமெண்வசுக்களுமகங்
குழைந்தேத்த- வுருத்திராதியர் பதினொருவருமிருந்திறைஞ்ச (௪௨)

இன்னராதியர்தொழுதெழக்கிம்புருடேசர் - சென்னிதாழ்ந்திட
மாதவர்சித்தர்கள்போற்றப்- பன்னகாதியர்பணிந்தெழச்சாரணர்பர
வ-வின்னபோற்பதினென்கணத்தேனையரிறைஞ்ச...... ......(௪௩)

இலங்குமேழிசை யாழெடுத் தியாவரு முருகத் - துலங்குநாரதர்
தும்புருமுதலியர்பாட - வலங்கன்மாமணி யணிகலனணிந்தபொற்
கொடிபோ - லலங்கொள்பூண்முலையரம்பையர்நாடகம்புரிய.௪௪.

முகந்தபாடலையாடலைமுழவினதொலியைத் - திகழ்ந்துவந்துமங்க
வர்பெறத்திருமுகமலர்ந்து,மிகந்தஞானமாதவர்க்கருளெழின்மறை
ப்பயன்கள்- புகர்ந்துமாமலைமடந்தையைப் பன்முறைபார்த்தும்()

இலகுவானவர்முனிவரரிவர்முதற்கணங்க-ளலகிலாதவரவரவர்விரும்
பினவளித்து,மலருளானெடுமான்மகவானவர்வினவ-வுலகவாழ்க்கை
க்குவேண்டுவவுவந்தருள்செய்தும்,...... ......(௪௬)

அருகிருந்தருண்முருகவேளமுதுகுமழலைத்- திருமொழிக்குளம
கிழ்வுறத்திருச்செவிதாழ்த்துந்- தருணவாதபத்தண்டையந்தாள்பட
த்திருமெய்- யுருகியும்புயந்தழுவியுமுவப்புடனகைத்தும் .. (௪௭)

துன்றுபேரருட்கடலிருந்தருளியதோற்ற- மென்றனுவினுவரை
த்திடற்கரியதவ்வெல்லை- நின்றமாதவனிருந்தருணிமலனை யிறைஞ்சி
யொன்றுணர்த்துவதுளதெனவுரைத்தன்மேயினனால்........(௪௮)

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.]

வேறு.

அண்டமளவற்றனவுமவ்வண்டத்தெல்லையிலா வணுவுமோங்கக்-
கொண்டதிருவருள்சுரந்து கோமளவல்லியு நீயுங் குலவா நின்ற - வெ
ண்டகைய கயிலைவனாவென்றுமினி துறைகின்றா யென்றுநாதச்- சு
ண்டமறைபல்கோடியெண்ணரியசிவாகமமுஞ்சாற்றாநிற்கும் (௪௯)

பொன்மயமாகியசடிலப்புனிதபரம்பரனனிப்புகலொணாதசின்
மயவம்பரமாகித்திகழ்தில்லை யம்பலத்துச்சிந்தைக்கேய்தா - நின்ம
யமிக்கானந்த நிருத்தமனவரதமுநீநீங்காவென்னுந் - தன்மையது
தெரியும்வகை யடியேற்குப்பேரருளாற்சாற்றுகென்றான் ... (௫௰)

வேதநான்முகன்திகழும் விரிஞ்சனுதவிய வெழிலான் மிகுந்தவ
ண்ட- நாதனாகியதிருமாலுமாசெய்தமொழிகேளானானந்தபோ
தனாய்ப்பணியாதி விருப்பறிவுதொழிலாயிப்புவனம்பெற்றாள் - கா
தனையனுள்ளமகிழ்ந்துதிருவாய்மலர்ந்தான் கருணைகூர ... (௫௧)

கேட்டவுணாமிக்குய்ய நாற்பொருளுமடைவுபெறக்கேட்டுளோரு
ம்- வேட்டதுவுமிலையாமுமுணாத்தருவ மிலையெவர்க்கும் விளம்
பொணாது- நாட்டமலரளித்தென்பாலன்புடையார்களினுமினி னாட்
டயாவர்- தோட்டலர்சூழ் துழாய்முகிலேயாதலினாலதுநினக்குச்சொ
ல்லலாகும் ........................................ (௫௨)

அறையளவின் மூவகையாருயிர்க்கெல்லாமாருயிராயகண்டமாகிக்
குறைவகலவெங்கண்ணுமென்ஞான்று நிறைந்தியல்பாய்க் குலவாநி
ன்றோ- மறைமொழிபாகமம்புகன்ற- வெல்லையிலாப்ப கிரண்டவரு
க்கந்தன்னு - ளிறைபுமெமையன்றியொரு பொருளுமிலையீ துண்
மையிசைக்குங்காலை ........................................ (௫௩)

உலகமெலாம்விளக்கமுற வுலகமெலாம்புகழ்ந்தேத்து முதயபா
னு - குலவுபெருங்கிரணங்கள் பரம்பிமிக நிறைந்திலங்குங்கொள்கை
போல- வலமுறவெங்கணுமாக நிறைந்திருப்பமாயிடினு மண்டர்த
ன்னுட்- சிலபொருளின்மிகவிளங்கிச்சிலபொருளிற் சிறிதிலங்கிச்சிற
ந்துநிற்போம் ........................................ (௫௪)

ஆதபன்றன்சுடரொங்கு நிறைந்தாலுங்க கனத்திலரிதுகாண்டற்-
கோதுமுயர்பாதலங்கடன்னில்விளக்கந்திகழுமுணாக்குமந்தப்-பாத

வங்கடன்னிலுநற்றருப் பணத்திலொளி தழைக்கும்பகரா நின்ற-
கோதிறருப்பணந்தனினும்படிகத்திலுருவின் மிகக்குலவுஞ்சோதி()

ஒளிருரூபலந்தனிலும் பருதிகாந்தந்தன்னிலுவமையில்லாத்-தெ
ளிவுதிகழ்நுருச்சுடரும் வெம்மையுமுண்டாகுமலர்ச்செந்தேன்கானு
மளிமருவுதுழாயலங்கற் கேசவநம்பேருருவுமதுவேபோல - விளிவு
மகிழ்விகந்துறையுநெறியறிவிலலைவகலவிளங்குவாயால்......(௫௬)

எங்குநிறைந்திருந்தாலுமெய்மையொருவரீதென்ன வெண்ணமா
ட்டா - ரங்கிதுவேயிபல்லென்று மாயிடினுநிலமாக்களன்பாற்செய்
த-தங்குசிவலிங்கத்திலென்மைக்காணலாகுமதுதன்னைப்பற்றத்- துங்க
நெறித்தவர்கண்டசிவகோசந்தனின்மிகவுஞ்சுடராநிற்போம்...(௫௭)

செறியுநெறித்தவர்கண்டவருட்சிவகோசந் தனிலுந்திகழ் சயம்பு
க்- குறியினிடைமிகவிளக்கங் கொண்டிருப்பமச்சயம்புக் குறியிற்
பார்க்கப்- பொறிமருவுதிருமார்பபுண்டரிகபுரப்பொதுவிற்போதந்
தன்னு-லறிவரியபரவிளக்கமுடனுறைதுமறையுமிதற்கையமின்றால்

சொற்பயிலுமொழியுண்மையுண்மை பருளுருவாகித் தூகளொன்
றில்லாப் - பொற்படருமானந்தப்பொது விடத்தின்மிகவிளங்கும்
பொலிவுமன்றிபற்புதமாமானந்தமெமக்குண்டாமாதலினலச்சபை
க்குச்சிற்பரவானந்தசபையெனுநாமமெஞ்ஞான்றுந்திகழாநிற்கும்

தனதெனதுதவிர்ந்தருளே சார்ந்துடையோருளக்கமலந் தன்னி
னீங்காக்- கனகசபைபோலெமக்குவிளக்கமுடனுனந்தங் கதிக்கநல்
க - வினதெனவேரூரிடமுமிலையதனலற்புதத்தோடிசைந்துகூற-
வனவரதமானந்தத்தாண்டவமே புரிந்தங்ஙனமராநின்றோம் (௬௰)

செங்கதிரின்பேரொளிக்குத்திவாகரகாந்தங்களகஞ்சேர்தலின்றிப்
பொங்குதலாலுறக்காந்திபொலியுமாறுதவியதுபோலவுண்மை - த
ங்குபொதுவானந்தவடிவானதன்மையாற்றன்பாற்றங்கு - மெங்குநி
றையெமக்குமிகுவிளக்கமுடனுனந்தமென்றுநல்கும் ... ...(௬௧)

சத்தியமாய்ச்சிவத்துருவாய்ப்பேரொளியாயருள்வடிவாய்த்தன்னே
ரின்றி- நித்தமுமாம்பொதுவுண்மையின்று நீகேட்டிபேனிகரொன்
றில்லா-மித்திரகாந்தமுமிந்துகாந்தமும் வெங்கதிரியக்குவெய்யோ
ன்றிங்க - டத்தமதற்கிரணமுறத்தீநீரங்குண்டானதன்மைபோல.()

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.]

வேறு.

மன்றகம்பரமானந்தவடிவமேயந்தமன்றத்-தோன்றுநாம்பரமா
னந்தவுருவமேயதனுலென்று- நின்றருட்பரமானந்தநிருத்தமேபுரி
துமெங்குந்-துன்றிநின்றிடினுமங்ஙன்றோற்றுதும்விளக்கமோங்க.

எங்கணுமிதுபோலில்லையெண்ணருங்கிரிகடம்முட்- புங்கவமான
வெள்ளிப்பொருப்பகத்தன்னின்மன்னித் - தங்குநம்பிரிவினென்று
நமனியப்பொதுவினென்றுந். துங்கமோடகண்டமாகியுறைகின்றே
ஞ்சுருதிபோற்ற.................................................... ....(சுச)

படைத்தலேயாதியாயவைந்தொழிற்பரிசுமென்று- நடத்துவானி
னைந்திவ்வெள்ளிநகத்துறைதலினுற்செவ்வி - மடற்றுழாய்மாலையா
ய்நீவாசவன்முதலியோர்நும்- மிடத்துறுதொழிலுக்கேற்ற தியாவு
மீகின்றேமென்றும்........ .... ......... ..................(சுரு)

பொற்புறுபுண்டரீகபுரத்திடைப்பரமானந்தத்- தற்புதவெள்ளந்
தன்னினகமகிழ்ந்தினிதிருப்பஞ்-சொற்படர்முத்திவேண்டுஞ்சுராதி
பர்சேவைசெய்து-நிற்பபொந்நாளுமெம்மைநினைவிடைநீங்கிடார்கள்

அம்பிகைகலையினென்றிவ்வணிக்கயிலைப்பானிற்பச் - செம்பொ
னம்பலத்துளென்றந்திருந்துபூரணமாய்நிற்பத்- தும்பிமாமுகத்து
மைந்தன்சுடரயிற்கந்தனந்தி - பம்புறுகணங்களன்பர்பகருமிப்பரி
சேநிற்பர்........................................ .............(சுஎ)

அளவிலாப்பரமானந்தவம்பலந்தன்னிலென்று - மூளமகிழ்ந்தி
ச்சையாக வுறைதனிச்சயமேவரசத்- துளவமாமுகிலோயின்னுஞ்சு
ராதிபர்தராதலத்தோர்-வளமுறப்போற்றவெம்மான்மகிழ்ந்துசெய்
தலங்களுண்டால்............. ...................................(சுஅ)

முழுவதுமுணாத்துமென்னின்முற்றுமோமுற்றுதேனுஞ்-செழு
நிலனிடத்தனந்தந்திகழ்பதியாதலாலே- விழுமியபதியவற்றுள் விள
ம்புதுஞ்சிலவென்றன்பால்- வழுவையினதண்மெய்போர்த்தவள்ளல
ங்கருள்செய்கின்றான்... ..................................... ......(சுகூ)

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

வேறு.

இடருற்றவருக்கிடரற்றிடவும்மிமையோர்முதலோர்தொழுதுய்ந்
திடவுந்-தொடரொப்புவனங்களுநன்னெறியேகுழுமம்படியாம்வாழுங்
கிரியா-லடர்பொய்ப்பிறவிக்கடன்மூழ்கினர்சென்றுறுமம்படிவந்தே

றுங்கணமெய்க்- கடவுட்கிரியென்பனவுட்புகலுங்கடவுட்கிரியிக்கயி
லைக்கிரியே.............................................. (௭௧)

பூதாதிபடைத்தவநீமுதலோர்புகழும்புகழிற்பொலிவெய்தியவக்
கேதாரமெனுந்தலனிற்களிகூர்கேதாரமெனப்பெயர்பெற்றுயரும்-
வேதாகமநூனெறிமாமுனிவன் மிருகமன்புடனே தகுவந்தனைசெய்-
தாதாரமெனக்கருதிப்பணியு மவனுக்கருள்செய்தமர்கின்றனமால்.

தலனெண்பிருகுத்தவமாமுனிதன் சாபத்தொடர்வால்வசுதேவண
ணிக்-குலநந்தனனுனபிறப்பிடையுன்குலமைந்தருடன்முடிவெய்தி
மிகும் - பொலனெனன் றியநின் பதமெய்திடமுன் பொற்பாலுதவும்
பொலிவுந் நெறியும் - நலனும்புகழும்பெருகுஞ்சோமநாதந்திகழு
ண்டருணன்னகாம் .................................................. (௭௨)

ஆசிற்பயிலும்பூசற்புலனற் றந்தக்கரணப்பந்தங்கெடுவோர்-மாசு
ற்றடையும்பரமுத்தியவண்மாணப்பெறுவோர்பெறுமாறருளப்-பா
சத்தளைதீர்நேசத்துலகம்பழியாமறைநூல்வழியாலெலமைநீ-பூசித்தி
டுமெய்க்காசிப்பதியிற்புவனுதிபனென்றமர்கின்றனமால் ...(௭௩)

மேலைச்சலதிப்பாலத்திடையெம் விண்கோநகர்போ லெண்கோ
கரணத்- தேலத்திகழ்வானவராயுளர்வந்தெலமவந்தனைசெய்திடயா
முறையுந் - தாலக்கிரியும்பெரிதென்பதுவுந்தனையேநினைவார்வினை
சாடுவதும்- பாலொத்தமொழிப்பனையாமுறையும்பதியுந்திருநீயே
ருப்பதமே.............................................. ...(௭௪)

தேனூறருவித்தரளத்திரள்சேர் திருவேங்கடமென் றுயரோங்கலி
னின் -றூனுதெறிகூரறிவாலெலமைநீயன்பால்வழிபட்டென்பூடுருகத்-
தானுனெனுமாதிகழ்வோர்புகழுந் தகுபொன்முகலிக்கலாயிற்பொ
ழிலிற்-கானூர்தருதென் கயிலைக்கிரியென் காளத்தியெமக்காள்பொற்
பதியே.......... ...........................................(௭௫)

காலங்களறிந் துநமைப்பரவிக் கடவுட்டிரளோடுயரத்திகிரிப்-பா
லன்புடனின்றூர்வங்கொடுநீபணியப்படியிற்படர்கோடரமா-மூலந்
தனிலெவ்வுலகும்முயிரும் முழுதுந்தருவாடொழுதர்ச்சனையா- லே
லுந்தவமும்பயனும்பெறயாமிச்சித்துறையுங்கச்சிப்பதியே...(௭௬)
மலையாளுடனேருருவாயுறைதும்மகிடாசுரனுமுயர்தானவருந்தொ
லையாவரமும்முரமுந்தலையுந்தோளுங்கழலுந்தாளுந்துணிபட்- டுலை
யாவொழியக்கலையான்மகிழ்ந் துடையாள்புனையுந்தொலடவாகை
பெறு -மலையாமறைநற்கலைமாதவர்பேரருளுடருள்கூரருணசலமே.

உறுகாதலினாலுலகந்தொழயாமுறைகின்றதுவெம்புலநீள்வழியே
மறுகாநெறிமெய்ச்சிவபோதமிகும் மாசற்றவர்தாநேசிப்பதுவாற்-
சிறுகாலுடனேயறுகால்பயிலுஞ் சீதப்பொழிலாமோதத் தொலை
வின்- குறுகாவிமையோர்மகிழக்கமழுங் கொற்றந்திகழுங்கோபற்
பதமே... ... ... ... ........................ ... ...(எஅ)

வழுவிந்துவினைப்பகைசாய்தரவும் மாயைக்கலையாவழியெய்திட
வுந்- தழுவுங்கருமாமல மற்றிடவுந்தற்போதமறச் சித்போதமிகுந்-
தொழுகும்படியும்பெறினிங்கிதுபோலுளதோவிலையென்றுயர்மாம
றைநூன்-முழுதுந்தெரிமாதவர்தாமகலா முதுகுன்றமுநம் பதியெ
ன்றுணரோ ... ................................ ............ ..... (எகூ)

விண்டாரணியெண்புகழ்வீடணனின் மேலன்புடனேபூசித்துனை
யுங்- கொண்டாறகல்போதினினாவனிழற்குறைவொன்றறயாமுறைகி
ன்றநலங் - கண்டாதரவாலப்பொற்பதியைக் கடவாதயனின்றியல்பா
லெமைநீ- தண்டாமனையாளுடனேபணியுந்தகைமைப்பதியத்தந்தி
ப்பொழிலே ... ..... ......... .............. .........(அய)

கருத்திற்கலனென்றிலர்நின்றிலகுங் கதிமீதென நூல்விதியாணி
னைபூந்-துருத்திப்பதியும்பிறவிக்கடலின் றுணையிங்கசலும்புணையெ
ன்றறிவைத்- திருத்தித்தெளிவித்தளிகூர்முதியோர் சேருந்திருநல்
லூரும்பணிவோ- ரருத்தித்துயரற்றவலஞ்சுழியு மகிழ்வாலுறைநந்
திகழ்மாநகரம்...... ................................ ... ...(அக)

வடந்தாழ்முலையாண்மணிமார்பகநீவந்தித்தெமையேசிந்தித்ததிரு
க்.குடந்தாபுரியுங்கடல்சூழ்நிலனிற்குலவுஞ்சிவலோகமிதென்றருளை
த்- தொடர்ந்தார்பணியும்புகழ்வுந்திகழ்வுந் தொலையாவிடைமாமரு
தந்தருமத்- திடந்தானிகராவடுதண்டுறையு மெய்ப்போதுநமக்கிய
ல்பாமிடமே.. ...... ..... ................................(அஉ)

பயிலாவிமையோர்பணிநம்பதியே பணியிற்றணியப் பரவைத்தி
ரையிற்- றுயிலாவுயிரும்புவனத்திரளுஞ்சுருதித்தொகையும்பொருத்
தத்தருநஞ்-சயிலாதிபமான்மயிலாயெமையேதணிவந்தனைசெய்நனி
கொண்டதுமா-மயிலாலவியம்புயல்போலதிரும்மயிலாடுதுறைத்தி
ருமாநகரம்.......... ......................... ...... .... ....(அங)

முருகார்தருமா யிரமாமலரான் முன்னாள்வழிபட்டுன்னாதரவால்-
வருநாளொருநாண்மலர்முன்மறையக்குறையாவகையுன்றன கண்ம
லரா-லருளாலெமையர்ச்சனைசெய்திடயாமடனேமிமகிழ்ந்துடனே

யுதவுந்- திருவார்பெருவிண்ணிழிமானமெனுந்திருவீழிபுநந் திகழ் மாநகரம்.................. ...... ... ... ... ... (௮௪)

தள்ளற்கரிதாம்வினைசாடியெழுஞ் சம்பாதிசடாயுவெனும்பெருமைப்-புள்ளுக்கரசானவரொம்மையருட்பொற்பூடணையாமுற்பூசனை செய்- துள்ளக்களிமேல்கொள்ளப்புவிமேலுண்டாமெவருங்கொண்டாசுறுநோய்- வெள்ளத்துலையாதுமருத்துவனாய்மேவும்பதியவ்வேளூர்நகரம்... ... ..... ... ... ..........................(௮௫)

மடனுண்மலரான்முதலாமிறையோர்வந்தித்துலவாவரமெய்திடநம்-மிடனுதரவாலிடமாயுறையும்மிமையந்தருசீருமைமங்கையுடன்-றடனுனிலமேமுதலாமுலகஞ்சாயுப்படிவந்தெழுபேரிறுதிக்-கடனுன்மறைசூழ்கலமேலுறையுங்கதிர்பொற்புரிசைக்காழிப்பதியே, ௮௬

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.]

வேறு.

பொதியின்மலைத்திருமுனிவன் பொன்னிபடிந் தெமைப்பூசை புரிவானெண்ணி-விதிமுறையத்தலத்தனுகநின்னைப்போன்முக்கோடிமிக்கநன்னூன்-மதிபுனையுமகத்தியர்கள்பணிந்ததெனச்சீரமிலா மாற்றந்தோற்ற- வதிசயித்தெய்தினனதனாற்றிருக்கோடிக்காவனத்துநகர்நந்தானம்.......................................(௮௭)

விஞ்சைநூலவர்புகழத்திகழுமங்கலக்குடியும்வெய்யதண்ட-வஞ்சனூரடையாதமகிழ்ச்சிதருமாந்துறையுமயங்குமஞ்சு - மஞ்சநூழினரகலாவக்கினேசப்பெயரோடமர்ந்தியாமோங்கும்-கஞ்சனூருப்பணிலக்கருமுகிலேநம்பதியாக்கருதுவாயே......... ... ......(௮௮)

முத்திநெறிப்பயனுதவுமுக்குளங்கள்செறிந்தாரமுயங்குசோலை-வித்துருமக்கொடிகடலிற்செங்கதிரின்கிரணமெனவிரிவெண்காடுந்-தத்துதிரைக்கடற்றரளநிலவெறிக்க வழகெறிக்குஞ் சாய்க்காடென்னு - முத்தமநற்றலமு மிலகிமைய மருளுமையுடனு முறையுந்தானம் ............ ............ .......... ... .........(௮௯)

பொருவரியநெடுஞ்சையப் பொருப்பெழுந்து கடல்புணர்ந்த பொன்னியாற்றுண்- மருவுமணலடுத்தகலாமணலிலைகணங்குறியே வளங்களோங்குந்- திருநதியினிருபாலுமொருகாலுமகலாததெய்வத்தானங் - கருதிலனேகங்களுளவங்கவற்றுட் சிலவுனக்குக்கழறினோமால்... ...... ...... ... ... ... ... ... ... (௯௰)

ஆற்றரியதீவினைகளுளவேனுமிலவேனுமங்ஙன்வந்து - தோற்றுமுயிரானவெலாநித்தமிகுமுத்திபெறத்துளங்காதியும்- போற்றுமுயரண்டபுருடன்றனருளிலகாதிபுண்டரீகத் - தேற்றதனியாலயமாந்திகழாரூர்மறைவனம்யாமிருக்குமெல்லை ... ...... ...(௬௧)

கந்தமலர்க்கணைவருத்த வன்னைதனைப்புணர்ந்துபெருங்காதலோங்கத்-தந்தைதனைக்கொலைசெய்துதொலைவரியபாதகங்கடாங்கிநொந்து- சித்தையுடன்வந்தணைந்தவந்தணன்மாமுத்தியினைச்சேரநல்கு-மித்தநெறிப் பொன்மதில்சூழ்தென்மதுரா யெமக்கினிய தெந்தனூன்றும் ....... ............ .... ... ....... ......... ... ...(௬௨)

